செ.வெ.எண்:19 நாள்: 08.10.2020

# அரியலூர் மாவட்டம்

# டிபிஎல் கிரிக்கெட் போட்டியில் தமிழக அணியில் இடம் பிடித்த மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் ஊக்கத்தொகையினை வழங்கினார்கள்.

துபாயில் நடைபெறவுள்ள டிபிஎல் கிரிக்கெட் போட்டியில் தமிழக அணியான சென்னை சூப்பர் ஸ்டார்ஸ் அணியில் விளையாடுவதற்காக அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த 4 மாற்றுத்திறனாளி இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட இளைஞர்கள் அனைவரும் மாவட்ட அளவிலான பல்வேறு போட்டிகளில் பங்கேற்று தங்கள் திறமையை நிருபித்து வந்தனர்.

அதனைத்தொடர்ந்து, தமிழக அணியில் இடம் பிடித்த இரும்புலிகுறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு.செந்தில்குமார், கீழமைக்கேல்பட்டி கிராமத்தைச்சேர்ந்த திரு.சன்மேக்கர், உடையார்பாளையத்தை சேர்ந்த திரு.கார்த்திக் மற்றும் திருமழப்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு.ராஜ்மகேஸ்வரன் ஆகிய 4 இளைஞர்களையும் மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலா ரூ.25,000/- வீதம் ரூ.1 இலட்சம் ரொக்கத்தொகையினை அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (08.10.2020) வழங்கினார்கள்.

இளைஞர்களுக்கு இவ்வுதவித்தொகையினை வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்று, அரியலூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க தங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**